# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2414/14 - 2024 දෙසැම්බර් මස 11 වැනි බදාදා - 2024.12.11

*2414/14 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

பிரிவு 86(7) இன் கீழான ஒழுங்குமுறைகள்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் விஜேசிங்க ஆராச்சிகே சேபாலிகா சந்திரசேகர ஆகிய நான், 2023 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 86 இன் உபபிரிவு (7) இன் கீழ், இந்த உத்தரவைச் செய்கின்றேன். 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அத்தியாயம் VIII இன் பிரிவு II இன் கீழ், ஒரு வதிவற்ற நபருக்கு மேற்கொள்ளப்படும் ஏதாவது கொடுப்பனவிலிருந்து வரியை நிறுத்தி வைப்பதற்கான நடைமுறையினை இங்கு அட்டவணையில் குறிப்பிடுகின்றேன். ஒவ்வொரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் வெளிமுக அனுப்புகையில் ஈடுபடும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் மற்றும் வெளிமுக அனுப்புகையை செய்கின்ற நிறுத்தி வைக்கின்ற முகவர்கள் இந்த நடைமுறைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

இந்த ஒழுங்குமுறைகள் 2025, சனவரி 1 முதல் செயன்முறைக்கு வரும்.

**விஜேசிங்க ஆராச்சிகே சேபாலிகா சந்திரசேகர,**
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 02,
2024, திசெம்பர் 10.


1A - G 43237 — 05 (2024/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**1. இந்த நடைமுறைக்கு இணங்கியொழுக வேண்டிய நபர்கள்**

திருத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 83அ, 84, 84அ மற்றும் 85 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வரி (இதனகத்துப் பின்னர் IRA எனக் குறிப்பீடு செய்யப்படும்), இலங்கைக்கு வெளியே கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நபர்களாகிய நிறுத்திவைத்தல் முகவர்கள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் வெளிமுக அனுப்புகையில் ஈடுபடும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் இந்த நடைமுறைக்கு இணங்க வேண்டும். இலங்கையில் உள்ள நிரந்தர தாபனத்தினூடாக எழுகின்ற கொடுப்பனவுகள் தவிர்ந்த இலங்கை அரசாங்கத்தின் கீழ் உள்ள அரசாங்க நிறுவனம் ஒன்றின் வதிவற்ற நபருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போதும் இந்த நடைமுறைக்கு இணங்குதல் வேண்டும்.

**2. வரி இசைவாணைக்கான தேவைப்பாடு**

வதிவற்ற ஆளொருவருக்கான கொடுப்பனவுகள் மீது (திருத்தப்பட்ட) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 83அ, 84அ மற்றும் 85 ஆம் பிரிவுகளின பிரகாரம், வருமதியான நிறுத்திவைத்தல் வரியானது, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏற்புடைய வெளிமுக அனுப்புகையின் தேவைப்பாட்டிற்கு வரி இசைவாணைச் சான்றிதழையும் வழங்குதல் வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்மறை பட்டியலில் (கீழே விடயம் 3) குறிப்பிடப்பட்டுள்ள வெளிமுக அனுப்புகை தொடர்பில் வரி இசைவாணைச் சான்றிதழ் தேவைப்படமாட்டாது. எதிர்மறைப் பட்டியலில் குறிப்பிடப்படாத ஏனைய அனைத்து கொடுப்பனவுகளுக்கும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து வரி இசைவாணைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**3. எதிர்மறைப் பட்டியல்**

(i) ஏதேனும் உருவ பண்டங்களின் இறக்குமதிக்கான அனுப்புகைகள்.

(ii) இலங்கையில் வதிவுள்ள ஏதேனும் கம்பனியில் வதிவற்ற நபருக்கு சொந்தமான விலை கோரப்பட்ட பங்குகளின் விற்பனை வரும்படிகளின் அனுப்புகைகள்.

(iii) பங்கிலாபத்தினை உரிய பங்குதாரர்களுக்கு அனுப்பும்போது அப்பங்கிலாபத்தில் 15% முற்பண வருமான வரி கழிக்கப்பட்டிருந்தால் அல்லது அப்பங்கிலாபமானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தால் அப்பங்கிலாபத்தின் அனுப்புகை (வெளிமுக அனுப்புகை நோக்கத்திற்காக 15% வரி கழிக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழை ஆதாரமாக இணைக்கப்படல் வேண்டும்).

(iv) ஒரு வெளிமுக முதலீட்டு கணக்கு ஒன்றினை ஆரம்பிப்பதற்காக வரி இசைவாணை சான்றிதழை ஏற்கனவே உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் பெற்றிருந்தால், வெளிமுக முதலீட்டு கணக்கானது தகுதியான வதிவுள்ள நபரால் ஆரம்பிக்கப்பட்டு அவ்வெளிமுக முதலீட்டு கணக்கிலிருந்து வெளிமுக அனுப்புகைகளானவை, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரையறைகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்படும்.

(v) கீழ்வருவன தொடர்பில் ஏற்புடைய போக்குவரத்து வியாபாரத்தை நடாத்தும் வதிவற்ற ஆளொருவரினால் பெறப்படற்பாலதான கொடுப்பனவுகளின் அனுப்புகைகள்

(அ) பயணிகளை இறக்கும் கப்பல் அல்லது (உள்நோக்கிய விமான பயணிகள் தொடர்பில்)

(ஆ) சரக்குகள், அஞ்சல்கள் அல்லது வேறு அசையும் உருவச் சொத்துக்களை இலங்கையில் இறக்குகின்ற கப்பல் (உருவச் சொத்துக்களின் இறக்குமதி தொடர்பில்)

(vi) இலங்கை அரசாங்கத்திடமிருந்து அல்லது அரசாங்க திணைக்களம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவின் அனுப்புகைகள் (2015.11.01 அன்று அல்லது அதற்கு பின்னர் நிரந்தரமாக இலங்கையை விட்டு வெளியேறிய ஓய்வூதியம் பெறுவோர் தவிர)

(vii) இலங்கைக்கு வெளியே வியாபாரக் குறிகளை பதிவுசெய்வது தொடர்பில் ஏற்றுமதி கம்பனியினால் மேற்கொள்ளப்படும் அனுப்புகை.

(viii) உயர்தொழில் அமைப்பின் உறுப்பினருக்கான வருடாந்த சந்தா அல்லது நாளிதழ், சஞ்சிகை மற்றும் ஏனைய பிரசுரங்களுக்கான கால சந்தா தொடர்பிலான அனுப்புகைகள்.

(ix) மாணவர்கள் தொடர்பில், பாடநெறிக் கட்டணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், பதிவுக் கட்டணங்கள், வாழ்க்கைச் செலவு மற்றும் அதனை ஒத்த இயல்பைக் கொண்ட கொடுப்பனவுகள் தொடர்பிலான அனுப்புகைகள்.

(x) வீசா செலவினங்கள், மருத்துவ செலவினங்கள், விமான பிரயாணச் செலவினங்கள் மற்றும் வெளிநாட்டில் ஹோட்டல் செலவினங்கள் தொடர்பிலான அனுப்புகைகள்.

(xi) இலங்கையிலுள்ள எவரேனும் நபருக்கு ஏதேனும் கடன் வழங்கப்பட்டதன் தொடர்பில் இலங்கைக்கு வெளியே எவரேனும் நபருக்கு மூலதன மீள்கொடுப்பனவுகள் அல்லது வட்டிக்கொடுப்பனவுகளுக்கான அனுப்புகைகள்.

(xii) பதிவுக் கட்டணங்கள் அடங்கலாக, வெளிநாட்டு கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் பிரதிநிதித்துவத்தில் பங்கேற்பதற்கான அனுப்புகைகள்.

(xiii) தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்குகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அனுப்புகைகள் (PFCA).

(xiv) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பாக உள்ளூர் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் வகுக்கப்பட்ட ஏதேனும் இறையாண்மை முறியொன்றின் மீதான வட்டி, கழிப்பனவு அல்லது தேறிப்பெறுகை மீதான ஏதேனும் ஈட்டுகையின் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பாக வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான வட்டி அல்லது கழிப்பனவு கொடுப்பனவிற்கான அனுப்புகை.

(xv) இலங்கை மத்திய வங்கியின் அனுமதியுடன் ஏதேனும் வர்த்தக வங்கி அல்லது ஏதேனும் சிறப்பு வங்கியில் வெளிமுக அனுப்புகையின் பெறுநரினால் (வைப்பாளர்) 2020.01.01 அன்று அல்லது அதற்கு பின்னர் திறக்கப்பட்டு மற்றும் பராமரிக்கப்படும் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட வட்டியின் அனுப்புகைகள்.

(xvi) நியம சான்றுபடுத்துகை சேவைகளின் அல்லது ஆய்வுகூட சேவைகளின் கொடுப்பனவிற்கான அனுப்புகைகள் (2020.01.01 அன்று அல்லது அதற்கு பின்னரான சேவைக்கொடுப்பனவுகள் தொடர்பில்).

(xvii) விமானம், மென்பொருள் உரிமங்கள் அல்லது அது தொடர்பான ஏனைய சேவைகளுக்கு எவரேனும் வதிவற்ற நபருக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்டினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவின் அனுப்புகைகள். சிறப்பு அட்டை ஒன்றை மூலம் வெளிநாட்டு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இராஜதந்திர பணியாளர் குழாமின் அங்கத்தவர்களினால் (உள்ளூர் பணியாளர் தவிர்த்து) பின்வருவனவற்றின் பிரகாரம் வழங்கப்பட்ட சிறப்புரிமை வரையில் பெறப்பட்ட வருமானத்தின் அனுப்புகை.

(அ) இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டம் அல்லது அதை ஒத்த சட்டம் ; அல்லது

(ஆ) ஐக்கிய நாடுகளின் சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளின் மேலான சமவாயம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறப்பு முகவர் நிலையங்களின் சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளின் மேலான சமவாயத்திற்கு பயன்கொடுக்கும் சட்டம்.

(xviii) இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டம் ஒன்று அல்லது அதனை ஒத்த சட்டமொன்று அல்லது ஒழுங்கமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கிடையிலான உடன்படிக்கையொன்றின் கீழ் குறித்துரைக்கப்பட்ட அளவு வரை சர்வதேச ஒழுங்கமைப்பொன்று ஆயின் உடன்படிக்கையின் கீழான விலக்களிப்பு இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டம் அல்லது அதனை ஒத்த சட்டத்தையும் விட பரந்ததாகவிருக்கும் அனுப்புகை.

(xix) இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டத்தின் அல்லது அதனை ஒத்த சட்டம் அல்லது இலங்கை அரசாங்கத்திற்கும் அமைப்புக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட அளவு வரை சர்வதேச அமைப்பினால் மேற்கொள்ளப்படும் அனுப்புகைகள், குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பானது இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டத்தின் அல்லது அதனை ஒத்த சட்டமொன்றின் கீழ் வழங்கப்பட்டதை விட பரந்துபட்டதாக இருக்க வேண்டும்.

(xx) ஊழியர்களின் ஊதியக் கொடுப்பனவுகளின் அனுப்புகை (பணிப்பாளர்களின் ஊதியம் அடங்கலாக இலங்கையில் ஊழியத்திலிருந்து அவர்களினால் காசு அல்லது காசற்ற நன்மைகளாக பெறப்பட்ட ஊதியங்கள் போன்று). அத்தகைய ஊதியத்தின் ஏதேனும் ஒரு தொகை அனுப்பப்பட்டிருப்பின், ஏற்புடைய தொழில்வழங்குனநரினால் வழங்கப்பட்ட வருமான வரி கழிப்பனவுச் சான்றிதழானது (T-10) (தொழில்வழங்குநர் அத்தகைய ஊழியருக்கு இத் தேவைப்பாட்டிற்கு மாத்திரம் பயன்படுத்தத்தக்க, ஊழிய வருமானம் தொடர்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டின் ஆரம்பம் முதல் அச் சான்றிதழின் திகதி வரை T-10 சான்றிதழை வழங்கலாம்) வரிக் கொடுப்பனவிற்கான சான்றாகவும் வரி இசைவாணைச் சான்றிதழுக்கு பதிலான சான்றிதழாகவும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**4. வரி இசைவாணையை பெறும் நடைமுறை**

எதிர்மறைப் பட்டியலின் (விடயம் 3) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பில் வெளிமுக அனுப்புகைகளை மேற்கொள்ளும் நபர் ஒருவர்(இதனகத்துப் பின்னர் விண்ணப்பதாரி எனக் குறிப்பீடு செய்யப்படும்), உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து "வரி இசைவாணைச் சான்றிதழை" பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் சார்பில், (கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ காடினியர் மாவத்தை, உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் 2 ஆம் மாடியிலுள்ள) இசைவாணை மற்றும் பணிப்புரை அலகின் ஆணையாளர், ஏற்புடைய வரி இசைவாணைச் சான்றிதழை வழங்குவார். (தொலைபேசி: +94112134204 மின்னஞ்சல்: cd@ird.gov.lk.

விலைப்பட்டியல்கள், ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களுடன் குறிப்பிடப்பட்ட வடிவமைப்பில் மாத்திரம் விண்ணப்பதாரி கோரிக்கையை அனுப்பிவைக்கலாம். குறிப்பிடப்பட்ட படிவம் (படிவ இல.:09) ஆனது www.ird.gov.lk என்ற உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**5. பொதுத் தகவல்கள்**

(i) இலங்கை மற்றும் ஏனைய நாட்டுக்கிடையில் நடைபெற்ற இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் (இதனகத்துப் பின்னர் DTAA எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொடர்பிலான ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, திருத்தப்பட்டவாறான உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டும் நிறுத்திவைத்தல் வரி வீதமானது தீர்மானிக்கப்படும். DTAA இல் குறிப்பிடப்படும் நன்மைகளை அனுபவிப்பதற்காக நிறுத்தி வைக்கும் முகவரினது வரி வதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) அனுப்புகையை மேற்கொள்ளும் நபர், மொத்த தொகையில் (விலைபட்டியலின் மொத்த தொகையில்) வரி வீதத்தை பிரயோகிப்பதன் மூலம் உரிய நிறுத்திவைத்தல் வரியினை செலுத்துதல் வேண்டும் என்பதுடன் தேறிய தொகை மாத்திரமே அனுப்புகைக்கு அனுமதிக்கப்படும். நபர் ஒருவர் ஏதேனும் விலைபட்டியலின் மொத்த தொகையை அனுப்ப வேண்டிய சந்தர்ப்பத்தில், விலைபட்டியல் தொகையானது, தேறிய தொகையாக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏற்புடைய நிறுத்திவைத்தல் வரியானது, மொத்தமாக-கூட்டப்பட்ட தொகையின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

(iii) அந்நபர், வெளிநாட்டுச் செலாவணித் தொகையை ரூபாய் தொகையாக மாற்றுவதற்கு அனுப்புகைத் திகதி அன்று இலங்கை மத்திய வங்கியின் வலைதளத்தில் பிரசுரிக்கப்பட்ட செலாவணி வீதத்தை (விற்பனை வீதத்தை) பிரயோகித்தல் வேண்டும்.

(iv) ஏற்புடைய நிறுத்திவைத்தல் வரியானது, அனுப்புகைக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும். கொடுப்பனவின் பின்னர் மீதித்தொகை மாத்திரமே அனுப்புகைக்கு அனுமதிக்கப்படும்.

**6. வெளிமுக அனுப்புகையில் ஈடுபட்டுள்ள உரிமம் வழங்கப்பட்டுள்ள வர்த்தக வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கான நடைமுறை**

உரிமம் வழங்கப்பட்டுள்ள வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள், எதிர்மறைப் பட்டியலில் (விடயம் 3) குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் தொடர்பில், வெளிமுக அனுப்புகைகளை மேற்கொள்ளும் நபர்களிடமிருந்து, வரி இசைவாணைச் சான்றிதழ் ஒன்றினைக் கோரத் தேவையில்லை. எவ்வாறாயினும், தேவையான தகவல்கள் விடயம் 7 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கும் முறையில் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

ஏனைய அனைத்து வெளிமுக அனுப்புகைகளுக்கும், ஒவ்வொரு உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கி மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, வெளிமுக அனுப்புகைகளுக்கு முன்னர், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் வரி இசைவாணைச் சான்றிதழைக் கோருதல் வேண்டும். உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கி மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, எச்சந்தர்ப்பத்திலும் நிறுத்திவைத்தல் வரியினை சேகரிக்க கூடாது.

**7. பதிவேடுகளை வைத்திருத்தல் மற்றும் தகவல்களை சமர்ப்பித்தல் என்பவற்றுக்கான தேவைப்பாடு**

(i) வெளிநாட்டு வெளிமுக அனுப்புகைளில் ஈடுபட்டுள்ள அனைத்து வர்த்தக வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள், ஏதேனும் உருவச் சொத்துக்களின் இறக்குமதிக்கான அனுப்புகைகள் தவிர்ந்த, அனைத்து வெளிமுக அனுப்புகைகள் தொடர்பிலும் கீழ்வரும் அட்டவணையில் பதிவுகளை பராமரித்தல் வேண்டும். (எதிர்மறைப் பட்டியலில் உள்ள கொடுப்பனவுகள் உட்பட)

**வெளிமுக அனுப்புகைகளின் அட்டவணை**

வங்கி/அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின் பெயர் :...............................................................................................................

.......................................................................................................................................................................

கிளை :.................................................................................... தொடர்பு இலக்கம்:....................................................................

மாதம் :.................................................................................. வருடம் :.....................................................................................

காலப்பகுதி : இருந்து .................................................................................. வரை ........................................................................

| தொடர் இலக்கம் | அனுப்புபவரின் பெயர் | அனுப்புபவரின் வ.செ.அ. இ (TIN)/வரி கோப்பு இலக்கம் (ஏதும் இருப்பின்) | பெறுநரின் பெயர் | செலுத்தப்பட்ட கம்பனி | அனுப்பப்பட்ட திகதி | விலைப்பட்டியல் இலக்கம் | விலைப்பட்டியலிடப்பட்ட தொகை | அனுப்பப்பட்ட தொகை | அனுப்பியவரினால் உ.இ.ஆ.நா. இற்கு செலுத்தப்பட்ட நி.வை. வரித் தொகை | வரி இசைவாணைச் சான்றிதழ் குறிப்பு இலக்கம் | அனுப்புகைக்கான காரணம் வரி (இசைவாணைச் சான்றிதழ்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் :...............................................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பதவிப் பெயர் :..................................................................................................

கையொப்பம் :.................................................................................................................................................

திகதி :.........................................................................................................................................................

(ii) உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, மாதாந்த அட்டவணையை ( மேலே வழங்கப்பட்ட உருவகப்படி ) தொடர்ந்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ cd@ird.gov.lk இற்கு Exel வடிவமைப்பில் இணைப்பாக மின்னஞ்சலில் சமர்ப்பித்தல் வேண்டும். இசைவாணை மற்றும் வழிமுறைகள் அலகின் ஆணையாளர், அட்டவணைகள் கிடைத்தமை பற்றி ஏற்புடைய நபருக்கு பதில் அஞ்சல் அனுப்புவார்.

(iii) நிறுத்திவைத்தல் முகவர்கள் ஏற்புடைய கொடுப்பனவுகளின் விபரங்களை அந்த வரிமதிப்பீட்டாண்டின் நிறுத்திவைத்தல் வரி முற்பண வருமான வரி வருடாந்த கூற்றில் வெளிப்படுத்த தேவைப்படுத்தப்படுகின்றனர்.

8. இந்த ஒழுங்குமுறையின் நோக்கத்துக்காக "அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்க வேண்டும்.

9. வரி விடுவிப்பு விண்ணப்பப்படிவ மாதிரி

வரி விடுவிப்பு விண்ணப்பப் படிவம்

பதிவு இலக்கம் [ ]

1

| **அனுப்புபவரின் விபரம்** | **பெறுபவரின் விபரம்** |
|---|---|
| உள்நாட்டு நிறுவனப் பெயர் : .................................................... | வெளிநாட்டு நிறுவனப் பெயர் : .................................................... |
| முகவரி :.................................................... | நாடு :.................................................... |
| வ.அ. இல. :.................................................... | வ.கோ. இல. : [ ] [ ] [ ] |

2 **அனுப்புகைகளின் விபரம்**

அனுப்புகையின் தன்மை :....................................................

பற்றுச்சீட்டு இலக்கங்கள் :....................................................

| மொத்த பற்றுச்சீட்டு இலக்கம் | அனுப்புகை தொகை | நாணயம் |
|---|---|---|
| | | |

3 **வரிக் கணிப்பீடு (வரிப் பொறுப்புள்ளவைக்கு மட்டும் ஏற்புடையது) மட்டும் ஏற்புடையது)**

| *தேறிய அனுப்புகை தொகை எனின் | *மொத்த அனுப்புகை தொகை எனின் |
|---|---|
| [ - ] (பற்றுச்சீட்டுத் தொகை) x (ஏற்புடைய வரி வீதம்) / 100 | [ - ] (பற்றுச்சீட்டுத் தொகை) x (ஏற்புடைய வரி வீதம்) / 100 – உரிய வரி வீதம் |
| நாணயம் [ ] வரித் தொகை [ ] | நாணயம் [ ] வரித் தொகை [ ] |

ஏற்புடைய நாணய மாற்று வீதமும் திகதியும் [ ] [ ]

வரி செலுத்தப்பட்ட தொகை (ரூபா) [ ]

4 **குறிப்புக்கள் :** (உரியது எனின்) :..........................................................................................................................

..........................................................................................................................

........................................................ பெயர் :..................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பம்

பதவியும் தொடர்பு இலக்கமும் :..........................................

**அலுவலகத் தேவைக்கு மட்டும்**

அலுவலர் பெயர்

கையொப்பம்

பணிப்புரை :...........................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

EOG 12-0106